Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95
Date of Publication : 5th & 6th of Every month

| Regd. No. TN / CC (S) DN / 119 / 12-14 | Licensed to Post without Prepayment WPP No. TN/PMG(CCR)/WPP-608/12-14 |
| --- | --- |

வேணு : 17 மார்ச் 2012 கானம் : 8



Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No.24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600083 and Printed by Mr.R.Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A, Sivakasi Co-Op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar

Related Websites : www.namadwaar.org Email:contact@namadwaar.org

NO FAME · NO SELF INTEREST · NO NAME · ONLY GOD

ஸ்ரீ ஹரி

தனி பிரதி Rs.10/-

# மதுரமுரளி

MADHURA MURALI

ஆண்டு சந்தா ரூ120/-

மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன்
வெளிவரும் தெய்வீக மாதப் பத்திரிக்கை




வேணு : 17 | மார்ச் 2012 | கானம் : 8

Delivered by India Post www.indiapost.gov.in



பிப்ரவரி 9, 2012 - சென்னை கொடுங்கையூர் விநாயகர் ஆலயம்
மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை



பிப்ரவரி 16, 2012 - திருப்பூர் வித்யா கார்த்திக் திருமண மண்டபம்
மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை



ஜனவரி 28, 2012 - மஹாரண்யம் ஸ்ரீகல்யாண ஸ்ரீனிவாசபெருமாள்
பிரதிஷ்டாதின வைபவம்




பிப்ரவரி 6,7 - 2012- - தூத்துக்குடி நாமத்வார் - ராதாகல்யாணம்



ஜனவரி 15 - 2012
மஹாரண்யம்
ஜய ஆஞ்சநேயர் சன்னதி
மாணவர்களுக்கு
புத்தாடை வழங்குதல்



ஜனவரி 22 - 2012
மதுரபுரி ஆஸ்ரம வளாகம்
மாணவர்களுக்கான
மஹாமந்திர
கூட்டு பிரார்த்தனை



ஜனவரி 31 - 2012 - கடலூரில் உள்ள எம்.டி.என் முதியோர் இல்லம் -
குளோபல் ஆர்கனைசேஷன் ஃபார் டிவினிடி சார்பாக உதவி





January 28, 2012 Lecture on 'Spirituality for this Day and Age'
by Poornimaji - GOD Satsang - Ceattle - USA



January 29, 2012 - "Nama Mahima" - Upanysam by Poornimaji
at Ram Krishna Vedic Cultural Center - Richmond, Canada




பிப்ரவரி 5, 2012 – சுப்பையா வித்யாலயம்
மேல்நிலைப்பள்ளி, தூத்துக்குடி
மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை

ஸ்ரீ ஹரி:
மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு:17 மார்ச் 2012 கானம்:8

## ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
## ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

**இந்த இதழில் ...**


- மதுரமான மஹனீயர்-192 03
- பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் 07
- பாகவத பழம் -24 09
- கருணாமூர்த்தி நீயல்லவோ கண்ணா! 14
- சனாதன புதிர் 24
- பாலகர்களுக்கு ஒரு கதை 21
- சத்சங்க செய்திகள் 25
- ப்ருந்தாவன கண்ணன் 30
- மாலே மணிவண்ணா 32
- அப்பாலுக்கு அப்பால் 34


**உண்டோ நீ படைத்த உயிர்த்திரளில் என்போல்**
**ஒரு பாவி? தேகாதி உலகம் பொய்யாக்**
**கண்டேயும், எள் அளவுத்துறவும் இன்றிக்**
**காசினிக்குள் அலைந்தவர் ஆர்? காட்டாய் தேவே?**

இறைவா! நீ சிருஷ்டித்த பல கோடி மனித பிறவிகளில் என்னையும் போல ஒரு பாவி இருப்பானா? உடலும் அது சார்ந்த உலகமும் பொய்யென எனக்கு நன்றாக தெரியும். அப்படி தெரிந்தும் எள் அளவு கூட துறவும் இல்லாமல், என்னைப்போல் உலகில் வாழ்ந்தவர்கள் யாராவது இருக்கின்றனரா? இருந்தால் காட்டுவாய் இறைவா! – தாயுமானவர்

# ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனம்

ராகம்: சுத்த தன்யாசி தாளம்: ஆதி

பல்லவி

ஸிம்மம் தோன்றினான் நரஸிம்மம் தோன்றினான்

விண்ணும் மண்ணும் அதிரும்படி ஸிம்மம் தோன்றினான்

அனுபல்லவி (ஸிம்மம் ..)

பிள்ளை சொல் கேட்டு துள்ளி எழுந்தவன்

தூணை பிளக்கவே அங்கு தோன்றினான்

(ஸிம்மம் ..)

சரணங்கள்

பக்த வத்ஸலன் அங்கு தோன்றினான்

ஸத்ய ஸந்தன் அங்கு தோன்றினான்

முக்தி தருபவன் அங்கு தோன்றினான்

அந்தி நேரத்தில் அங்கு தோன்றினான்

(ஸிம்மம் ..)

கால காலன் அங்கு தோன்றினான்

கோலாகலன் அங்கு தோன்றினான்

மாலோலன் அங்கு தோன்றினான்

பாலபாலகன் அங்கு தோன்றினான்

(ஸிம்மம் ..)

மண்ணை கேட்டவன் அங்கு தோன்றினான்

விண்ணை அளந்தவன் அங்கு தோன்றினான்

நாண் ஏற்றியவன் அங்கு தோன்றினான்

வெண்ணை உண்ட முரளீதரன் அங்கு தோன்றினான்

(ஸிம்மம் ..)

# மதுரமான மஹனீயர் – 192

(டாக்டர். ஆ.பாக்யநாதன்) **வ்ருத்திம் கர்நாடக கதஹா – 2**

ராமச்சந்திராபுர ஆஸ்ரமத்தில் இருக்கும் சிவலிங்கத்தில் அகண்ட பாரதத்தின் முழு வரைபடம் உள்ளது! இது மட்டுமல்லாமல், இந்த சிவலிங்கமானது சந்திரன் வளர்ந்து வரும் (சுக்லபக்ஷம்) வளர்பிறைகாலத்தில், கொஞ்சம் கொஞ்சமாக நிறம் மாறி பௌர்ணமியன்று வெண்மை நிறமடையும். அப்படியே தேய்பிறையில் நிறம் மாறி அமாவாசையன்று, கருமை நிறத்தையடையும். ஸ்ரீஸ்வாமிஜி இந்த விவரங்களை அறிகையில் மிகவும் சந்தோஷித்தார். அது மட்டுமின்றி "என்ன ஒரு சிறப்பான சிவலிங்கம் பார்த்தாயா?" என்று சொல்லியவாறு இருந்தார்கள்.

அன்று ஸ்ரீஸ்வாமிஜி "கொல்லூர் மூகாம்பிகையை தரிசித்திருக்கிறீர்களா?" என்று வினவினார். இல்லை என்ற பதில் வரவே, கொல்லூருக்கு கிளம்பலாம் என்றார் ஸ்ரீஸ்வாமிஜி. செல்லும் முன்னர் ஸ்ரீஸ்வாமிஜி "கூட்டம் மிகுந்திருந்தால் திரும்பி விடுவோம்" என்றார். கோவிலில் கூட்டம் இருக்கும் என்று உணர்த்துகிறாரோ? மூகாம்பிகையை தரிசிக்காமல் திரும்ப வேண்டி இருக்கும் என்று சொல்லுகிறாரோ!

கொல்லூர் செல்லும் வழியில் ஒரு பழைய கோட்டை தென்பட்டது. அனைவரும் இறங்கி கோட்டைக்குள் சென்றனர். சாலயிலிருந்து கற்கள் நிறைந்து கரடு முரடான மேல்நோக்கிய பாதையாக இருந்த வழியில் சென்றால், கோட்டை வாயில் வருகிறது. ஸ்ரீஸ்வாமிஜி கோட்டைக்குள் செல்லும்பொழுதே, இந்த கோட்டைக்கும் ஹைதர்அலிக்கும் சம்பந்தம் இருக்க வேண்டும் என்று சொன்னார்கள். இந்த கோட்டை சிவப்பநாயக்கர் என்ற கேளடி வம்சத்து ராஜாவின் பெயர் கொண்டது. இந்த விவரங்களின்படி, கோட்டை பதினாறாம் நூற்றாண்டை சேர்ந்ததாக இருக்க வேண்டும். இதில் அரண்மனையில் வசித்து வந்த, ராஜ குடும்பங்களுக்கான பிரத்யேக குளங்கள், பல இருந்திருக்கின்றன என்பது தெரிய வருகிறது.

இதற்கான நீர் வசதி அருகிலுள்ள மலையில் இருந்து வருகிறது. முன்னர் இது மிக பெரியதாக இருந்திருக்க வேண்டும்.

பாரத நாட்டின் சரித்திர நிகழ்வுகளை பற்றி, எப்பொழுதுமே நன்கு தெரிந்து வைத்து கொள்ள வேண்டும் என்று ஸ்ரீஸ்வாமிஜி அறிவுறுத்துவார். அதை சரியாக தெரிந்து வைத்து கொள்ளாதபொழுது, சற்றே அதை வலியுறுத்தியும் சொல்வார். அது மட்டுமின்றி தற்காலத்தில் நடந்து வரும் உலக நிகழ்வுகளையும் தெரிந்து வைத்து கொள்வது அவசியம் என்பார். குருநாதர் தாம் சொல்வதை செய்தும் காட்டுவார் அல்லவா?



கொல்லூருக்கு ஆதிசங்கர பகவத்பாதர் வந்துள்ளதாக வரலாறு கூறுகிறது. இங்கு கோல மஹரிஷி என்ற முனிவரும், ஒரு அசுரனும் பரமேஸ்வரனை நோக்கி தவமிருந்தனர். அந்த அசுரன் அந்த முனிவருக்கு தொல்லைகளை கொடுத்து வந்தான். அது தாளாமல் மஹரிஷி ஆதிசக்தியை பிரார்த்தித்தார். அந்த அசுரனின் தவம் பலித்தால் உலகிற்கு கெடுதல் என்பதால், அவள் அசுரனை ஊமையாக(மூகனாக) செய்து விட்டாள். பரமேஸ்வரன் அவர்களின் தவத்திற்காக மெச்சி தோன்றியபொழுது, ஊமையான அசுரனால் ஒன்றும் பிரார்த்திக்க முடியாமல் போய் விட்டது. அந்த அசுரனுக்கு . மஹரிஷி செய்த பிரார்த்தனையினால் தன் தவமும் பயன் தராமல் கெட்டதே என்று மேலும் கோபம் அதிகமாகி விட்டது! அவன் மேலும் துன்பங்கள் தர ஆரம்பித்தான். மஹரிஷி மறுபடியும் ஆதிசக்தியிடம் வேண்ட அவள் இம்முறை அசுரனை அழித்தாள். அதனால்தான்

அவளுக்கு “மூகாம்பிகா” (ஊமை அசுரனை அழித்தவள்) என்று பெயர். அப்படியே குருநாதர் ஆதிசங்கரபகவத்பாதரின் பரம்பரையை ஒட்டி வந்த பெரிய மஹாத்மாக்களை பற்றி பேசி வந்தார். கொல்லூர் செல்லும்பொழுதும் திரும்பும்பொழுதும், ஸ்ரீஸ்வாமிஜி காஞ்சி மஹாஸ்வாமிகள் பற்றியும், சிருங்கேரி சந்திரசேகர பாரதி ஸ்வாமிகள் பற்றியும், திருவண்ணாமலை யோகிராம்சுரத்குமார் மஹாராஜ் பற்றியும் பேசிக்கொண்டே வந்தார்கள். குருநாதரின் வாக்கான இந்த கங்கையில் மூழ்கி கொண்டே அனைவரும் வந்தனர்.

பாகவதர்களான மஹான்களின் தர்மத்தை குருவானவர் சொல்ல, சிஷ்யனானவன் அப்படியே திரும்ப திரும்ப சொல்லி மனப்பாடம் செய்வதில்லை. குருவானவர் பாகவத தர்மத்தை கற்பிக்கிறார். எப்படி? தனது வாழ்க்கையின் மூலமே. குருவானவர் குளிக்கையில், கிருஷ்ணன் யமுனையில் எப்படி குளித்தான் என பேசுவார். அதுபோலவே சாப்பிட அமர்ந்தாரானால் “போதேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளின் உச்சிஷ்ட விசேஷத்தினால்தான் ஒரு ஊமை குழந்தைக்கு திவ்ய ஞானமே சித்தித்தது” என்பார். நடக்கையிலோ, கிருஷ்ணன் எப்படி பிருந்தாவன காடுகளில், தனது மிருது சரணங்களை கொண்டு நடந்தான் என்றும், அவன் எப்படி இனிமையாக பேசுவான் என்றும், எப்படி பாகவதம் விவரிக்கிறது என்று தனது மதுரமான குரலில் சொல்வார். இப்படி குருவானவர் ஸதா பாகவதம், பகவான், பாகவதர்கள் ஆகியோரை பற்றியே பேசிய வண்ணம் இருப்பார். இப்படி இருக்கும் குருவை பார்த்து பார்த்து, சிஷ்யனானவன் பாகவத தர்மம் என்றால் என்ன என்று புரிந்து கொள்வான்.

நம் குருநாதர் அப்படிப்பட்டவர்தானே! அன்று பாகவத தர்மத்தின் மிக உயர்ந்த பாடங்கள் கிடைத்தன! குருவானவரிடம் அன்பு பாராட்டி, அவரை கடவுளை போல் கருதி, தொண்டு செய்து, அவரிடமிருந்து பாகவத தர்மத்தை கற்க வேண்டும் என்று பாகவதம் கூறுகிறது. அதையே ஸ்ரீஸ்வாமிஜி “சிஷ்யனானவன் குருவிடம் அன்பும்

மரியாதையும் பாராட்டி, கல்வி கற்க வேண்டும்" என்பார்.

கொல்லூர் பயணத்தின்பொழுது மஹாத்மாக்களின் உபதேசங்கள் எப்படி அனாயசமாக தர்மத்தை போதிக்கின்றன என்பது பற்றியும், அவை எப்படி எக்காலத்திற்கும் மிக சரியாக இருக்கின்றன என்பது பற்றியும், எப்படி மஹாத்மாக்களின் உபதேசங்கள் மிக ஆழமான கருத்துக்களை தாங்கி வருகின்றன என்பது குறித்தும், கேட்டுக்கொண்டிருந்த அன்பர்களுக்கு ஊக்கமும் உணர்வும் பொங்கும்படி சொன்னார் ஸ்ரீஸ்வாமிஜி.

அப்பொழுது காஞ்சி மஹாஸ்வாமிகளை பற்றி பேசுகையில் அவர் எப்படி ஒரு அன்பருக்கு "உன்னை நான் எப்பொழுதும் பெயர் மற்றும் புகழிலிருந்தும் காப்பேன்" என்று அவர் வரம் தந்தது குறித்து சொன்னார். மற்றொருமுறை காஞ்சிமஹாஸ்வாமிகளை ஒரு பக்தை வீட்டுக்கு அழைத்தாவாறே இருந்தார். பெரியவர்கள் வீட்டிற்கு வரவில்லையே என்று அந்த பக்தை மிக்க வருத்தத்துடன் இருந்து வந்தார். அதை நன்கு அறிந்த பெரியவர்களோ, மிக்க கருணையுடன் அந்த பக்தையை பார்த்து "ஏன் கல்லாலும் மண்ணாலும் ஆன வீட்டிற்குள் என்னை அழைக்கிறாய்? நான் உனது ஹிருதயத்தில் ஒரு தெய்வீக வீடு கட்டி அதில் நிரந்தரமாக குடி புகுவேன்" என்று அருளினார்.

யோகிகளுக்கும் இப்படி கிடைக்குமா? பெரியவர்களின் கருணை அதை சுலபமாக தந்து விட்டதே? ஸ்ரீஸ்வாமிஜி மேற்கண்ட விஷயத்தை சொல்லிவிட்டு "பார்த்தாயா! பெரியவர்கள் இப்படி தேனொழுகும் மதுர வார்த்தைகளினால் தனது கருணையை பொழிவாரெனில், அந்த பக்தை தன் வாழ்நாள் முழுவதும் எப்படி இதை மறக்க முடியும்?" என்றார்.

இதை கேட்ட அன்பர்களுக்கு அதன் ஆழம் கொஞ்சம் புரியத்தான் செய்தது! ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் இந்த சொற்களையும் வாழ்நாளில் மறக்க முடியுமா என்ன?

(மதுர யாத்திரை தொடரும்)



# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள்

கேள்வி : நான் ஆறு மாதங்களாக மஹாமந்திரம் ஜபித்து வருகிறேன். இருப்பினும் எனது தீய சிந்தனைகள் எவ்விதத்திலும் குறையவில்லை. மேலும் அதிகமாக கோபப்படுகிறேன். இவை அதிகமானது போல தெரிகிறது. நான் என்ன செய்வது?

பதில் : நீங்கள் என்ன செய்து வருகிறீர்களோ, அதை தொடர்ந்து செய்து வாருங்கள். வேறு எது பற்றியும் கவலைப்படாதீர்கள். முடிந்தால் நீங்கள் செய்யும் நாமகீர்த்தனத்தை அதிகப்படுத்தவும். இதே போல ஒரு கேள்வியை, ரமண மஹரிஷிகளிடம் ஒரு அன்பர் கேட்டார். அதற்கு ரமணர் "ஒரு கோட்டையை பிடிக்க வேண்டுமெனில், அதனுள் இருக்கும் அனைத்து சிப்பாய்களையும் வெளியில் வரவைத்து, ஒவ்வொருவரையும் கொல்ல வேண்டும். அது போலவே, உங்களது மனது எனும் கோட்டையின் உள்ளே உள்ள வாசனைகள்தான் இப்படி வெளிவருகின்றன. ஆதலால் அதை பற்றி கவலை கொள்ள வேண்டாம்" என்றார். எக்காரணம் கொண்டும், அதனால் செய்து வருவதை நிறுத்த வேண்டாம்.

கேள்வி : ஒரு உண்மையான மஹாத்மா, தனக்கு தீங்கு செய்பவரையும் கூட தண்டிக்க மாட்டார் என்கின்றனர். அப்படியெனில், அவர்களுக்கு தீங்கு செய்வோர் தாங்கள் தவறு செய்வதை எப்படி உணர்வர்? தண்டனை இருந்தால்தானே, தவறை உணர முடியும்?

பதில் : மஹாத்மாக்கள் ஒருபொழுதும் தனக்கு தீங்கு செய்பவர்களையும் தண்டிப்பதே இல்லை. இருப்பினும் இப்பிரபஞ்சம் இயங்க காரணமாக உள்ள சக்தி, மஹாத்மாக்களுக்கு தீங்கு செய்பவர்களை தண்டிக்கும்.

கேள்வி : கடவுள் என்பது என்ன? கடவுள் உண்மையா அல்லது வெறும் பொருளா?

பதில் : கடவுள் உண்மை பொருட்களையும் கடந்தவர். கடவுள் இல்லாவிடில், இப்படி நினைக்கவும் முடியாது. நாம் பேசுவது, நினைப்பது, கேட்பது, பார்ப்பது, உணர்வது, முகர்வது இப்படி எல்லாவற்றுக்குமே ஆதாரமாக இருப்பது கடவுள்.

கேள்வி : நான் கடவுளை நம்புபவன். எனக்கு தெரிந்தவர்கள், வாழ்வில் நல்ல விஷயங்கள் செய்கையில், நல்ல காலம் பார்த்து செய் என்கின்றனர். நல்ல காலம் என்று ஒன்று உண்டா? கடவுள் என்றும் காலத்தை பற்றி கூறும் ஜோதிடம் என்றும் இருவேறு பகுதிகள் உள்ளனவா? இரண்டும் சம்பந்தமற்றவையா?

பதில் : எல்லாம் ஒரே பகுதிதான். ஒரு பாடப்புத்தகம் இருப்பதாக வைத்து கொள்வோம். கடவுள் என்பதே முக்கிய பாடம். ஜோதிடம் என்பது அந்த பாடத்தின் கீழ் வரும் ஒரு பாகத்தின் தலைப்பு.

Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji

VAPSSKY
absolute motion machine

Our products

Globe Tipper



Unit Converter



Smart Alarm Pro



DRACO, The Dragon



Our Solutions

- Mobile Games
- Mobile Data Security Systems
- Multimedia content Exchange
- Mobile Applications
- Mobile Enhancement Utilities
- 3D Multiplayer Games

For any Business Related Enquiry email us at contact@vapssky.com



# பாகவத பழம் 24

**பாகம் 2 – அத் 9**

– ஸ்ரீஸ்வாமிஜி



தன்னை பார்த்து யாரை தியானம் செய்கிறீர்கள் என்று கேள்வி கேட்ட தர்மபுத்திரரை பார்த்து, பகவான் புன்முறுவலுடன், "தர்மபுத்திரரே! நான் என் பக்தர்களைத் தியானம் செய்தேன்'', என்றான். ஆச்சர்யப்பட்ட தர்மபுத்திரர் பகவானிடம், இப்பொழுது எந்த பாக்யசாலியான பக்தரை தியானித்தீர்கள்'' என்று கேட்டார். அதற்கு பகவான், என்னையே நினைத்துக் கொண்டு, போர்க்களத்தில் அம்பு படுக்கையில் இருக்கும் அருமை பக்தனான பீஷ்மரைத்தான் தியானம் செய்தேன். அது இருக்கட்டும் தர்மபுத்திரரே, தாங்கள் என்னைக் காண வந்த விஷயம் என்ன என்று கூறுங்கள்'' என்றான்.

தர்மபுத்திரரும் தன் மனம் அமைதியில்லாமல் தவித்துக் கொண்டிருப்பதை பகவானிடம் கூறினார். பகவான் கிருஷ்ணனோ, "வாருங்கள், நாம் சென்று பீஷ்மரைப் பார்ப்போம். அவருக்கு அனைத்து தர்மங்களும் தெரியும். அவர் உபதேசம்தான், தங்களுக்கு மன அமைதி கொடுக்கும்'' என்று சொல்லி பாண்டவர்களை குருக்ஷேத்திர போர்க்களத்திற்கு அழைத்துச் சென்றான்.

அம்புப் படுக்கையில் கிடந்த பீஷ்மரோ, உத்தராயண புண்யகாலத்தை எதிர்பார்த்திருந்தார். உடலின் ஒவ்வொரு அங்கமும் அம்புகளால் துளைக்கப்பட்டிருந்த போதிலும், அவர் உயிர் பிரியவில்லையாம். அவர் இஷ்டப்படும்போதுதான் உயிர் பிரியும் என்று அவருக்கு அவர் தந்தை வரம் தந்திருந்தார். இப்படி வேதனையோடாவது உயிர் வாழ என்ன ஆசை? உண்மையில் அவர் பகவான் தன்னை வந்து பார்க்கமாட்டானா என்றுதான் காத்துக்கொண்டிருந்தார். தன் ஹ்ருதயம் அறிந்த பகவான் தானாகவே வரவேண்டும் என்று எண்ணியதால், யாரிடமும் சொல்லி அனுப்பவில்லை. பீஷ்மர் நேராக அழைக்காததால் பகவானும், தான்

பீஷ்மரைப் பார்க்க விரும்பி வந்ததாக காட்டிக் கொள்ளாமல், தர்மபுத்திரரின் சந்தேகம் தெளிய அழைத்து வந்தேன் என்கின்றான்! போர்க்களத்தில் அம்புப் படுக்கையில் கிடந்த பீஷ்மரை, பகவான் கிருஷ்ணனும் பாண்டவர்களும் நமஸ்கரித்தார்கள். இவ்வளவு அம்புகள் துளைத்திருந்த போதிலும், பீஷ்மரைப் பார்த்தால், வானத்திலிருந்து பூமியில் நழுவி விழுந்த ஒரு தேவனை போலிருந்தாராம். அச்சமயம் அங்கு எல்லாப் பிரும்ம ரிஷிகளும், ராஜரிஷிகளும் பீஷ்மரைப் பார்ப்பதற்கு வந்தனர். அங்குக் கூடியிருந்த அனைவரையும் மானஸீகமான ஸ்துதிகளாலும், நமஸ்காரத்தினாலும் பீஷ்மர் பூஜித்தார். ஈஸ்வரனான பகவான் கிருஷ்ணனையும் அவன் மகிமையை அறிந்த பீஷ்மர் பூஜித்தார்.

பாண்டவர்களைப் பார்த்த பீஷ்மருக்கு, பிரேமையினால் கண்களில் கண்ணீர் ததும்பியது. அவர்கள் பட்ட கஷ்டங்கள் எல்லாம் நினைவிற்கு வந்தது. அவர் பாண்டவர்களைப் பார்த்து கூறலானார். தர்மத்திலிருந்து வழுவாதவர்களும் தர்மத்தினுடைய குழந்தைகளாகவே இருக்கக்கூடிய உங்களுக்கு வாழ்க்கையில் எத்தனை கஷ்டங்கள்! இது அநியாயம் அன்றோ! ஹே தர்மபுத்திரா! நீ தர்மமே கண்ணாக உள்ளாய். மேலும் ப்ராம்மணர்களை மிகவும் மதிப்பதால், அவர்களுடைய ஆசீர்வாதமும் உனக்கு முழுமையாக உள்ளது. இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல், ஸாக்ஷாத் பகவானே உங்களுடன் இருக்கின்றான். இருந்தபோதிலும் நீங்கள் எவ்வளவு இன்னல்களை சந்திக்க நேர்ந்தது. இந்த குந்திக்குத்தான் எவ்வளவு கஷ்டங்கள். அவள் கணவனை இழந்த போது நீங்கள் எல்லாம் எவ்வளவு சிறு குழந்தைகள்! குந்தியானவள் தன் கணவனை இழந்ததிலிருந்து, உங்கள் பொருட்டு எத்தனை கஷ்டங்களை அடைந்தாள். இவை அனைத்திற்கும் காலமே காரணம் என்று நான் நம்புகிறேன்.

*ஸர்வம் காலக்ருதம் மன்யே பவதாம் ச யதப்ரியம்*

*ஸபாலோ யத்வஸே லோகோ வாயோரிவ கனாவளி:* (1.9.14)

"எப்படி மேகக் கூட்டமானது, காற்றின் வசமாக உள்ளதோ அப்படி உலகமே காலத்தின் வசமாக உள்ளது. பொதுவாக தர்மத்திலிருந்து ஒருவன் நழுவினால் அவனுக்கு துக்கம் நேரிடும். அல்லது ஒருவன் பலஹீனமாக இருந்து, அவன் எதிரி பலவானாக இருந்தாலும் துக்கம் நேரிடலாம். தனம் இல்லாதவனுக்கு கஷ்டம் வரலாம். நமக்கு பராக்கிரமம் இல்லை என்றால், பராக்ரமசாலிகளால் துக்கம் ஏற்படலாம். இவை அனைத்தும் இருந்தும் ஒருவேளை தெய்வம் அனுகூலமாக இல்லை என்றாலும் துக்கம் வரலாம். ஆனால் பாண்டவர்களாகிய உங்கள் விஷயத்திலோ, தர்மமமே தர்மபுத்திரராக அவதரித்துள்ளது. மஹாபலம் பொருந்திய பீமன் இருந்தும், மஹாபராக்கிரமம் பொருந்தியவனும் காண்டீவம் என்னும் வில்லை உடையவனுமான அர்ஜுனன் இருந்தும், ஸாக்ஷாத் பகவான் க்ருஷ்ணனே தோழனாக இருந்தும், உங்களுக்கு எத்தனை துக்கங்களும் ஆபத்துக்களும் நேர்ந்தன! இது காலத்தினால் தான் ஏற்பட்டது" என்றார் பீஷ்மர்.

இப்படி பீஷ்மர் கூறுவதைப் பார்த்தால் ஒரு சந்தேகம் தோன்றலாம். காலம் பகவானைக் காட்டிலும் வலிமை வாய்ந்ததா? பகவான்தான் காலம் என்று குந்தி துதிக்கின்றாளே! காலம் அனைவருக்கும் பொது (சமம்). நம் முன் கர்மபயனின்

*உன் குடும்பத்திற்கு அவன் இப்படி கிருபை செய்ததால் அவனுக்கு பாரபக்ஷம் உண்டு என்றோ நீங்கள் மட்டும்தான் அவனுக்கு பிரியமானவர்கள் என்றோ எண்ண வேண்டாம். அவனுக்கு எல்லோரும் சமம்தான். ஆனால், பக்தர்களிடம் தனி பிரியம் உள்ளதால்தான் உன் குடும்பத்தை அப்படி காத்தான். அதே காரணத்தினால்தான் பிராணனை விட இருக்கின்ற எனக்கு நேராக வந்து, தரிசனம் தந்து, அருளி உள்ளான்!*

விளைவாக நமக்கு ஏற்பட வேண்டிய சுக துக்கங்களை காலம் கொண்டு வந்து சேர்க்கும். இது பக்தனுக்கும் உண்டு. ஆனால் அப்படி காலம் நம்மை ஒரு கஷ்டத்தில் நிறுத்தும் பொழுது, நாம் பகவானை சரணடைந்தோமானால் அந்தக் கஷ்டத்திலிருந்து பகவான் நம்மை விடுவிக்கின்றான். பக்தர்கள் என்றும் எப்பொழுதும் பகவானை சரணடைவதால், அவர்களுக்கு துக்கங்கள் பெரிதாகத் தெரிவதில்லை. திரௌபதியை அப்படி துஷ்டர்களின் சபையின் நடுவில் நிறுத்தியது காலம். அவள் அந்த சமயம் "கோவிந்தா" என்று அழைத்து பகவானை சரணடைய பகவான், அக்ஷயமாக வஸ்திரங்களை அருளி, பரம கருணையினால் திரௌபதியின் மானத்தைக் காத்தான்.

கருணாமூர்த்தியான பகவானை சரணடைபவர்களை, காலம் கொண்டு சேர்க்கும் கஷ்டங்கள் பாதிக்காது என்பது தான் உண்மை. ஆகையால், மேலும் பீஷ்மர், "தர்மபுத்திரரே! பகவான் க்ருஷ்ணனின் அபிப்ராயம் என்ன என்று நம்மால் யூகிக்கவே முடியாது. அவனது ஹ்ருதயம் ப்ரம்ம, ருத்ராதிகளுக்கும் புரியாத ஆழம் உடையதாக இருக்கின்றது. இவையெல்லாம் ஏன் நடந்தது என்று அவன் ஒருவனே அறிவான். அதனால், உலகத்தில் அனைத்தும் பகவானின் ஸங்கல்பத்தினால் நடக்கிறது என்பதை உணர்ந்து, தாங்கள் ராஜ்ய பரிபாலனம் செய்யவேண்டும் என்றார். இதோ நம் முன் நிற்கும் இந்த கிருஷ்ணன்தான் அந்த பகவான். ஸாக்ஷாத் நாராயணனேதான் வ்ருஷ்ணி குலத்தில் உதித்து மாயையால் தன்னை மறைத்துக் கொண்டு ஸஞ்சரிக்கின்றார்".

"தர்மபுத்திரரே! எந்த கிருஷ்ணனை மாமன் மகனாகவும், நண்பனாகவும், தூதுவனாகவும், தேரோட்டியாகவும் நீ நினைத்து செய்தாயோ, அந்த வாஸுதேவனின் மகிமைகளை அறிந்தவர்கள் சிலரே. உன் குடும்பத்திற்கு அவன் இப்படி கிருபை செய்ததால் அவனுக்கு பாரபக்ஷம் உண்டு என்றோ நீங்கள் மட்டும் தான்

அவனுக்கு பிரியமானவர்கள் என்றோ எண்ண வேண்டாம். அவனுக்கு எல்லோரும் சமம்தான். ஆனால், பக்தர்களிடம் தனி பிரியம் உள்ளதால்தான், உன் குடும்பத்தை அப்படி காத்தான். அதே காரணத்தினால்தான் பிராணனை விட இருக்கின்ற எனக்கு நேராக வந்து, தரிசனம் தந்து, அருளி உள்ளான்! எந்த ஒரு வாஸுதேவனுடைய திவ்ய நாமங்களைச் சொல்லிக்கொண்டும் அவன் ரூபத்தை நினைத்துக்கொண்டும் பிராணனை விடுகின்ற யோகிகள் கர்ம பந்தங்களிலிருந்து விடுபடுகிறார்களோ, அந்த பகவான் கிருஷ்ணன், நான் என் சரீரத்தை விடும் வரையில் காத்திருக்கட்டும் என்றும் எந்த ஒரு ரூபம் யோகிகள் த்யானத்தில் மட்டுமே காண்கின்றார்களோ, அந்த வாஸுதேவன் தன் முன் ப்ரத்யக்ஷமாக இருக்கட்டும் என்று ப்ரார்த்திக்கின்றார் பீஷ்மர். அம்புப் படுக்கையில் படுத்திருந்த பீஷ்மரிடம், பலவிதமான தர்மங்களைக் கேட்டு அறிந்தார் தர்மபுத்திரர்.

(கனியும்)

சில நாடுகளில் இன்றும் கூட ஒருவிதமான சட்டம் இருக்கிறது. இது என்ன என்றால் எவன் ஒருவன் கைகளால் தவறு செய்கிறானோ அவனது கைகளை வெட்டி விடுவர். இப்படியே கண்களால் தவறு செய்திருந்தால் கண்களை பிடுங்கி விடுவர். எந்தெந்த உறுப்புகளால் ஒருவன் தவறு செய்தானோ அதையதை எடுத்து விட வேண்டும். இதுதான் நீதியின் சாராம்சம்.

அப்படி இருக்க, "கிருஷ்ணா, நான் என் மனதினால் செய்யாத குற்றங்களில்லை; தவறு செய்த உறுப்பை எடுத்து விடுவதுதான் நீதி என்றிருக்கையில், தவறுகளே செய்த என் மனதை, நீ, அழிக்காமல் இருக்கலாமா? (அழிக்காமல் இருப்பது நீதியல்லவே!)"

– மஹாரண்யம் ஸ்ரீமுரளீதர ஸ்வாமிஜி

# கருணாமூர்த்தி நீயல்லவோ கண்ணா

-ருத்ரேசன்

கம்பீர ஸ்ரீநிவாஸன் என்று ஸத்குருநாதரால் கொண்டாடப்படும் ஸ்ரீ கல்யாண ஸ்ரீநிவாஸ பெருமாளின் வஸந்த பஞ்சமி ப்ரதிஷ்டாதின வைபவம், ஜனவரி 28-ம் தேதி மிக கோலகலமாக கொண்டாடப்பட்டது. தை மாதம் முதல் நாளன்றே தன் ஸந்நிதியில் தனுர் மாதம் அதிகாலையில் நாம ஸங்கீர்த்தனம் செய்த



மலைப்பட்டு மற்றும் மாகாரண்யம் கிராம குழந்தைகளுக்கு புத்தாடைகளை பிரசாதமாக அருளி, பெருமாள், குழந்தைகளின் மகிழ்ச்சியைப் பார்த்து உகந்தார். அது முதலே ப்ரதிஷ்டாதின கொண்டாட்டங்களுக்கு தயாராகிவிட்டார். ஸ்ரீமத் பாகவத ஸப்தாஹ பாராயணம் மற்றும் விசேஷ ஜப, ஹோமங்கள், விசேஷ திருமஞ்சனம் மற்றும் ஸத்குருநாதரின் மலர்க்கரங்களால் புஷ்பாஞ்சலி, அன்னகூட உத்ஸவம், பக்தர்களின் நாம கோஷம் என கண்டவர் கேட்டவர் என அனைவரையும் குதூஹலம் பற்றிக் கொண்டது.



மாலையில் திவ்ய பீதாம்பரத்துடன், ஸ்ரீதேவி பூதேவி ஸகிதனாக திருக்கல்யாண உத்ஸவம் கண்டருளினார். ஸ்ரீகல்யாண ஸ்ரீநிவாஸ பெருமாள் மண்டபத்தில்

ஜனவரி 22-ம் தேதி டாக்டர் பாக்யநாதன் தலைமையில், மாணவர்களுக்கான சிறப்பு ப்ரார்த்தனை கூட்டம் நடைப்பெற்றது. இதில் நமது ஸ்ரீகல்யாண ஸ்ரீநிவாஸ பெருமாள் ஸந்நதியை சுற்றி அமைந்துள்ள, பல்வேறு ஊர்களில் உள்ள பள்ளி மாணவர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

தை மாதம் இறுதி வெள்ளிக்கிழமை (பிப்ரவரி 10) ஸ்ரீகல்யாண ஸ்ரீநிவாஸ பெருமாள் ஸந்நதியில் திருவிளக்கு பூஜை சிறப்பாக நடைபெற்றது. தன் பக்தர்களின் கஷ்டங்களை தன் தலையில் சுமக்கும் அந்த கருணாமூர்த்தி தன்னை நாடி நேரில் வர முடியாத அன்பர்களுக்காக தனது அர்ச்சகர் ஸ்ரீ பம்மல் பாலாஜி அவர்களை ஒவ்வொரு ஊராக அனுப்பி, அவர்களுக்காக பிரார்த்தனை செய்ய வைத்து, தானே அருள் மழையும் பொழிகிறார்.

அவ்வகையில் கடந்த மாதம் நெல்லை மாவட்டம் சேரன்மகாதேவி, ரவணசமுத்திரம், ஆழ்வார்குறிச்சி, வள்ளியூர், முக்கூடல் மற்றும் களக்காடு ஆகிய இடங்களில் தனி ப்ரார்த்தனைகளும் மாணவர்களுக்கான கூட்டு பிரார்த்தனைகளும் நடத்தினார். கருணைக் கடலான நம் ஸத்குருநாதரின் நியமனத்தால் நடத்தப்பெறும் இத்தகைய பிரார்த்தனை கூட்டங்களில் கலந்து கொள்ளும் அன்பர்கள் பலரும், மகாமந்திர மஹிமையாலும் பெருமாளின் கருணையாலும் உடனடியாக தமது கவலைகளில் இருந்து விடுதலையடைந்து, நிம்மதி பெருமூச்சு விடுவதை பார்க்கும்போது நம் அனைவருக்குமே மகிழ்ச்சிதானே!

ஒரு அம்மையார் கடந்த ஜனவரி 7ஆம் தேதியன்று திருச்சி நாமத்வாரில் நடந்த தனி பிரார்த்தனையின்பொழுது, திரு.பம்மல் பாலாஜி அவர்களை சந்தித்து, "கணவருக்கு தொழிலில் நஷ்டம் ஏற்பட்டு விட்டது. மனத்தளர்ச்சியால் தற்பொழுது வேலைக்கு செல்லாமல் இருக்கிறார். குழந்தைகளுடன் நிம்மதியாக இருக்க முடியவில்லை. ஆனால் கணவர் மிக நல்லவர். சூழ்நிலையினால் இப்படி இருக்கிறார்" என்று கண்ணீர் மல்க தெரிவித்திருந்தார்.

பிரார்த்தனையின் போது திரு. பம்மல் பாலாஜி அவர்கள் ”தினமும் வீட்டில் சமைக்கையில், அரிசி களைய ஆரம்பிப்பதிலிருந்து சமையல் முடியும் வரை “ஹரே ராம” மஹாமந்திரம் சொல்லி வாருங்கள். ஸ்ரீகல்யாண ஸ்ரீனிவாசபெருமாள் படத்தை வைத்து கொண்டு பிரார்த்தித்து வாருங்கள். துளசி பூஜை செய்யுங்கள். பெருமாளின் கருணையினால், சீக்கிரம் துக்கம் விலகும்” என்று தெரிவித்திருந்தார்.

சரியாக ஒருமாதம் கழித்து பிப்ரவரி 8ஆம் தேதி அன்று திரு.பாலாஜி திருச்சி நாமத்வாருக்கு வந்திருந்தார். அப்பொழுது அந்த அம்மையார், திரு.பாலாஜி சொன்னபடி நாமஜபம் செய்து ஸ்ரீகல்யாண ஸ்ரீநிவாஸ பெருமாளை வழிபாடு செய்து வருவதாகவும், தானே எதிர்பார்க்காதபடி தன் கணவரின் நடத்தையில் மிகப்பெரிய முன்னேற்றமும் குடும்பத்தில் அமைதியும் நிலவுவதாக கண்ணீர் பெருக்குடன் தமது நன்றியை வெளிப்படுத்தினார், அந்த அம்மையார். திரு.பாலாஜியும், பெருமாளின் நாமம் சொல்லி அவரை பிரார்த்தித்தபடி சமைத்து கொடுத்த பிரசாதமே இப்படி செய்தது என்று சந்தோஷமுடன் சொல்லி, அந்த அம்மையாரை அனுப்பி வைத்தார்.

இப்பிரார்த்தனைகளின் பலனாக பலரும் தம்பதிகள் ஒற்றுமை, உடல் நோயிலிருந்து ஆறுதல், மன அமைதி, தொழில் முன்னேற்றம் முதலிய பல நன்மைகளை அடைந்துள்ளதை நன்றியுடன் தெரிவித்துக்கொண்டனர். மார்ச் மாதத்தில் பாலக்காடு, காரைக்குடி, உளுந்தூர்பேட்டை - மங்களூர் ஆகிய இடங்களில் திரு.பாலாஜி தனி பிரார்த்தனைகளை நிகழ்த்த உள்ளார்.



முன் அட்டை: பிப்ரவரி 20, மஹா சிவராத்திரியன்று விட்டலாபுரம் ஸ்ரீப்ரேமிக விட்டலர் சன்னதியில் அன்பர்களுடன் ஸ்ரீஸ்வாமிஜி ; பின் அட்டை : அன்று மாலை – மஹாரண்யத்தில் கன்யாகுமரி ஸ்ரீஜய ஹனுமார் பிரதிஷ்டா தின வைபவம்.

# பாலகர்களுக்கு ஒரு கதை



## சிறுமி கற்று தந்த பாடம்

ஒரு எழுத்தாளர் அவர். அவர் எப்பொழுதும் விடியற்காலையில் கடற்கரைக்கு சென்று நடைப்பயிற்சி செய்வார். கடலை பார்த்து ஆனந்தப்படுவார். அப்புறம்தான் அவர் எழுதவே ஆரம்பிப்பார். ஒருநாள் அப்படி நடைப்பயிற்சி செய்ய போகையிலே அவருக்கு யாரோ ஒருவர் கடற்கரையில் நடனமாடி கொண்டிருப்பது போல் தோன்றியது. என்றுமில்லாமல், இன்று யாரோ நடனம் ஆடுகிறார்களே என்று அதை பார்க்க வேண்டும் என்ற ஆசையில் விரைவாக நடந்தார். அருகில் சென்று பார்த்தால்தான், யாரும் நடனமாடவில்லை என்று அவருக்கு புரிந்தது. ஒரு சிறுமி கடலுக்கும் கடற்கரைக்குமாக ஓடி வந்து கொண்டு இருந்ததுதான் அவருக்கு அப்படி தோன்றி இருக்கிறது. அவள் ஏதோ விளையாடுகிறாள் என நினைத்தார் அவர். மிக அருகில் சென்று பார்த்த பின்தான், அவருக்கு மற்றும் ஒன்று புரிந்தது.

அந்த சிறுமி ஒன்றும் விளையாடவில்லை. நடனமும் ஆடவில்லை. அவள் கடற்கரைக்கு ஓடி வந்து எதையோ பொறுக்கி, மீண்டும் கடலுக்குள் ஓடி, எதையோ கடலுக்குள் தான் பொறுக்கியதை எறிந்தவாறு இருந்தாள். இதை மறுபடி மறுபடி செய்து கொண்டிருந்தாள். அந்த அன்பர் இப்பொழுது சிறுமியை நெருங்கி விட்டார். அவர் ஆவலுடன் அவளை பார்த்து “என்னம்மா செய்கிறாய்” என்றார். சிறுமி ஒரே ஒரு கணம் தாமதித்து, அவரை பார்த்து “இதோ இதை எறிகிறேன்” என்றபடி தன் கையை காண்பித்தாள். இப்பொழுதுதான் அவருக்கு அந்த சிறுமியின் கைகளில் என்ன இருக்கிறதென்று தெரிந்தது.

அது ஒரு நட்சத்திர மீன். அது கடலலையால் அடிக்கப்பட்டு கரைக்கு வந்திருந்தது. அவர் கேட்டார் “ஏன் இதை இப்படி கடலுக்குள் எறிகிறாய்” என்றார். சிறுமி சற்றே அவரை ஆழமாக

பார்த்து " சூரியன் உதித்து விட்டானே? சூரியன் வர வர அலைகள் குறைந்து விடும். அப்புறம் இவை கடலுக்குள் செல்ல முடியாது. அப்புறம் இவை இறக்க நேரிடும்" என்றாள். அந்த மனிதருக்கு சிறுமி செய்வது கொஞ்சம் முட்டாள்தனமாக பட்டது.


ஏனெனில் அந்த கடற்கரை முழுவதும் ஏராளமான நட்சத்திர மீன்கள் அலையால் அடிக்கப்பட்டு ஒதுங்கி இருந்தன. இத்தனையையும் அந்த சிறுமியால் எப்படி தூக்கி போட முடியும்? அதனால் அவர் "ஏனம்மா! நீ தூக்கி போடுவதால் ஒன்றும் வித்தியாசம் வந்து விட போவதில்லை. இங்கே பார்! எத்தனை மீன்கள் கிடக்கின்றனவென்று. இந்த கடற்கரை மைல்கணக்கில் இருக்கிறது. எல்லா இடமும் நீ செல்ல முடியுமா என்ன?" என்று சிறிது ஏளனத்துடன் கேட்டார்.

அந்த சிறுமி அதை காதில் போட்டுக்கொள்ளாதது போல, அப்பொழுது குனிந்து மற்றொரு நட்சத்திர மீனை தன் கையில் எடுத்து அதை கடலுள் எறிந்தாள். அது கடலுள் விழும் சமயம், அந்த மீனை நோக்கி கைகாட்டி, "அந்த ஒரு மீனுக்கு, அது வித்தியாசம்" என்றாளே பார்க்கலாம்!

அந்த அன்பர் அந்த சிறுமியின் பதிலில் கரைந்து போனார். அந்த சிறுமிக்குத்தான் எத்தனை விசாலமான உள்ளம்! அவர் என்ன செய்தார் தெரியுமா? தான் கொண்டு வந்திருந்த எழுதுவதற்கான காகித தாள்களை ஓரமாக வைத்தார். அது முக்கியம் என்று அவருக்கு தோன்றவே இல்லை. தானும் இப்பொழுது, சிறுமியுடன் சேர்ந்து, ஒவ்வொரு மீனாக கடலுக்குள் போட ஆரம்பித்தார். அந்த சிறுமியின் ஒரு சிறிய அழகான நடத்தையினால் அன்று பலப்பல மீன்கள் உயிர் பிழைத்தன என்பதை சொல்ல வேண்டுமா என்ன!

குழந்தைகளே! அதுபோலவே, நாமும் எதை செய்தாலும் அதை அன்புடனும் சிரத்தையுடனும் செய்ய வேண்டும். அப்படி அன்புடனும் சிரத்தையுடனும் செய்தால், கடவுள் அருள் அதை மிக பெரிய அளவில் பலருக்கும் நன்மையாக உருவாக்கும்.

Our Humble Pranams to the Lotus feet of
His Holiness Sri Sri Muralidhara Swamiji



Gururam Consulting Private Limited

சனாதனப் புதிர் - பகுதி - 37 –ஆத்ரேயன் ( விடைகள் அடுத்த இதழில்)

1. கர்தம ப்ரஜாபதிக்கும் தேவஹூதிக்கும் பிறந்த குழந்தைகள் எத்தனை? அவரது பெயர்கள் என்ன?

2. கர்தமரின் ஒன்பது பெண்கள் யாரை மணந்தார்கள்?

3. மஹாபாரதத்தில் , பகவான் கிருஷ்ணர் கபிலரைப் பற்றி கூறும் இடங்கள் எங்கே காணப்படுகின்றன?

4. கபிலர் பிறந்த இடம் எது? இறுதியாக ஆச்ரமம் அமைத்துக் கொண்டு இப்பொழுதும் இருப்பதாகக் கூறப்படும் இடம் எது?

5. நாரதரின் உயர்வை / பெருமைகளைப் பற்றி மஹாபாரதத்தில் எங்கே காணப்படுகிறது?



Ramalinga Adigalar

6. இராமலிங்க அடிகளார் எங்கு பிறந்தார்? அவரது தாய் தந்தையரின் பெயர் என்ன?

7. இராமலிங்க அடிகளால் ஆரம்பிக்கப்பட்ட சத்ய ஞானசபை எப்பொழுது மூடப்பட்டது?

8. சாரதா தேவி எங்கு , எப்பொழுது அவதரித்தார்? அவரது தந்தையின் பெயர் என்ன?



9. சாரதா தேவி யாரை மணந்தார்? அவருக்கு திருமணத்தின் போது வயது என்ன?

10. சாரதா தேவி எப்பொழுது தனது பூதவுடலை நீத்தார்?

# சென்ற மாத சத்சங்கங்கள்

**ஜனவரி 28 –** ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில் **ஸ்ரீகல்யாண ஸ்ரீனிவாசபெருமாளின் பிரதிஷ்டாதின** வைபவம் மதுரபுரி ஆஸ்ரம வளாகத்தில் கொண்டாடப்பட்டது. திரளான அன்பர்கள் வந்திருந்து குருவருளும் திருவருளும் பெற்று சென்றனர்.

**பிப்ரவரி 5 –** ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில் **தூத்துக்குடி சுப்பையா மேல்நிலை வித்யாலயத்தில் மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை** சுமார் 1500 அன்பர்கள் பங்கேற்க நடைபெற்றது.

**பிப்ரவரி 6 , 7 – புதிய தூத்துக்குடி நாமத்வார்** திறக்கப்பட்டு ஒரு வருடமானதை ஒட்டி **ராதாகல்யாண வைபவம்** நடைபெற்றது. இதில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் முழுவதுமாக பங்கேற்றிருந்தார்கள். ஸ்ரீஸ்வாமிஜி ராதாகல்யாணம் முடிந்தபின், வந்திருந்த அன்பர்கள் அனைவருக்கும் தம் திருக்கரங்களால் பிரசாதம் வழங்கினார்கள். முன்னதாக ஐந்து நாட்கள் சென்னை குளோபல் ஆர்கனைசேஷண் ஃபார் டிவினிடியை சேர்ந்த முரளிஜி அவர்களின் சத்சங்கம் தூத்துக்குடி நாமத்வாரில் நடைபெற்றது.

**பிப்ரவரி 9 – சென்னை கொடுங்கையூர் விநாயகர் ஆலயத்தில்** ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் ஒரு **மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை**யை நிகழ்த்தினார்கள். இங்கு ஈரோடு பாலாஜி பாகவதர் அவர்களின் **ராமாயண உபன்யாசம்** நவாஹமாக நடைபெற்றது.

**பிப்ரவரி 16 – திருப்பூர் நகரில் மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை** வித்யா கார்த்திக் திருமண மண்டபத்தில் சுமார் 3000அன்பர்கள் முன்னிலையில் ஸ்ரீஸ்வாமிஜி நிகழ்த்தினார்கள்.

**பிப்ரவரி 20 – மஹாசிவராத்திரி**யன்று காலை விட்டாலாபுரம் பாண்டுரங்கன் கோவிலில் ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில் விசேஷ பூஜையும் நாமகீர்த்தனமும் நடைபெற்றது. அன்று மதுரபுரி ஆஸ்ரமத்தில் அகண்டமாக ஹனுமான் சாலீசா பாராயணம் காலை 6மணி முதல் மாலை 6மணி வரை நடைபெற்றது. அன்று மாலை மஹாரண்யம் கன்யாகுமரி ஜயஹனுமான் பிரதிஷ்டாதினம் என்பதால், விசேஷ திருமஞ்சனமும் பூஜையும் ஸ்ரீஸ்வாமிஜி

முன்னிலையில் நடைபெற்றது. திரளாக வந்திருந்த அன்பர்கள் அனைவருக்கும், ஆஸ்ரமத்தில் பிரசாதம் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. இரவு மதுரபுரி ஆஸ்ரமத்தில், ஸ்ரீஸ்வாமிஜி பூஜை செய்து தீர்த்தபிரசாதம் வழங்கினார்கள்.

**டிசம்பர் 26 – பிப்ரவரி 20, 2012 –** அமெரிக்கா ஹூஸ்டன் நாமத்வாரிலும் அமெரிக்காவின் பிற மாகாணங்களிலும் கனடா நாட்டிலும் குளோபல் ஆர்கனைசேஷன் ஃபார் டிவினிடி இந்தியாவை சேர்ந்த பூர்ணிமாஜி, பல சத்சங்கங்களை நிகழ்த்தினார். இதில் பாகவத சப்தாஹம், குழந்தைகளுக்கான கோபகுடீர நிகழ்ச்சிகள், கார்பரேட் நிகழ்ச்சிகள்





ஆகியன இடம்பெற்றன. ஹூஸ்டன் நாமத்வார் வருடாந்திர நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட பிறகு, சிகாகோவில் சில சத்சங்கங்களில் அவர் கலந்து கொண்டார். அதன் பின்னர், ஜனவரி 20லிருந்து 30 வரை சியாட்டில் நகரத்தில் பல சத்சங்கங்களை அவர் நிகழ்த்தினார். ஜனவரி 29இல் கனடா நாட்டில் ரிச்மண்ட் ராமக்ருஷ்ணா வேதிக் கல்சரல் சென்டரில் சுமார் 150அன்பர்கள் முன்னிலையில், நாம மஹிமை குறித்து உபன்யாசம் செய்தார். பிப்ரவரி மாதத்தில் விர்ஜினியா யூனிவர்சிடியில் சனாதன தர்மத்தை பற்றி மாணவர்களின் வினாக்களுக்கு பதில் சொல்லும்

விதத்தில் ஒரு கலந்துரையாடலில் கலந்து கொண்டார். விர்ஜினியா இந்து சென்டரில் Blissful Path to Everlasting Bliss என்ற தலைப்பில் கதோபநிடதம், சூர்தாஸ், சத்சங்க மஹிமை ஆகியன குறித்து பேசினார். இதன் பின் நியுயார்க் மற்றும் நியுஜெர்ஸி நகரங்களில் கோவில்களிலும், அன்பர்கள் இல்லங்களிலும் பாகவதம், பக்த சரித்திரங்களை குறித்து பூர்ணிமாஜி உபன்யாசம் செய்தார்கள். பல இடங்களில் மஹாமந்திர கீர்த்தனையும், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனங்களும் சத்சங்க அன்பர்களால் பாடப்பட்டன. மேலும் விவரங்களை http://godivinity.org/ வலைதளத்தில் விரிவாக காணலாம்.

**ஜனவரி 15, 2012** – தை மாதம் முதல் நாள் பொங்கல் திருநாளன்று மஹாரண்யம் ஆஞ்சநேயர் சன்னதியில், தனுர் மாத நகர சங்கீர்த்தனத்தில் கலந்து கொண்ட பள்ளி குழந்தைகள் அனைவருக்கும் புத்தாடைகள் வழங்கப்பட்டன.

rb **rajmani builders**
launches its new project
**"rajmani's mathura"**
at kolapakkam (near Porur)
well designed and ventilated 2/3 bhk homes
(825 sq. ft to 1075 sq. ft) at fair prices
ph: 98400 30711 email: rajmanibuilders@gmail.com
website: www.rajmanibuilders.com

**ஜனவரி 22, 2012 –** ஸ்ரீகல்யாண ஸ்ரீநிவாசபெருமாள் மண்டபத்தில் மஹாரண்யம் சுற்றி உள்ள கிராம மாணவமணிகளுக்கான மஹாமந்திரகூட்டு பிரார்த்தனை நடைபெற்றது. அதுபோல அம்பாசமுத்திரத்தில் பிப்ரவரி 2, 8 ஆகிய தேதிகளில் மாணவமணிகளுக்கான மஹாமந்திரகூட்டு பிரார்த்தனை நடைபெற்றது. இவ்விரண்டிலும் திரு.பம்மல் பாலாஜி அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார்.

**ஜனவரி 31, 2012 –** தானே புயலால் பாதிக்கப்பட்ட கடலூர் நகரில் உள்ள, எம்.என்.டி.என். முதியோர் இல்ல அன்பர்கள், சுமார் நாற்பத்தி மூவருக்கு, கடலூர் குளோபல் ஆர்கனைசேஷன் ஃபார் டிவினிடி சார்பாக போர்வைகள் வழங்கப்பட்டு, அன்னதானமும் செய்யப்பட்டது.

## சனாதனப் புதிர் : பகுதி – 36 விடைகள் –ஆத்ரேயன்

1. திரிபுர ரஹஸ்யம் - தத்தாத்ரேயர் - பரசுராமருக்கு சொல்லும் பொழுது; யோக வசிஷ்டம் - சித்த கீதை ; ஜனக கீதை;
2. அஷ்டவர்க கீதா; ஜபாலா உபநிஷத்; ப்ரஹதாரண்யக உபநிஷத்;
3. பகவத் கீதை- கர்மணைவ ஹி ஸம்ரித்திம் ஆஸ்திதா ஜனகாதய: என்ற ஸ்லோகம் .
4. வெங்கடராமன் ; தந்தை சுந்தரம் அய்யர்
5. 30.12.1879 அவதரித்த நாள்; 14.4.1950 உடலை விட்ட நாள்
6. ராம சரித மானஸ் ; ஹனுமான் சாலிசா ; 1523 முதல் 1624 - 101 வருடங்கள். சிலர் 1511 முதல் 1634 - 123 வருடங்கள் என்றும் சொல்லுகின்றனர்.
7. சுந்திரர் - சுந்தரானந்தர் - திருமந்திரம் : 3047 செய்யுட்கள் கொண்டது.
8. ஸ்ரீனிவாச நாயகா - தந்தை வரதப்ப நாயகா
9. வ்யாஸராயா - இவர் கிருஷ்ண தேவராயரின் ஆஸ்தான குரு
10. வாஸுதேவா. குரு அச்யுத ப்ரேக்ஷா. சன்யாஸத்திற்குப் பிறகு பூர்ணப்ரக்ஞனா; பீடாதிபதியான பிறகு ஆனந்த தீர்த்தர்.

நாரத மஹரிஷி கலகங்களை செய்பவர் என்று பெயர் இருக்கிறது. அவர் செய்யும் ஒரே கலகம் என்னவென்றால்,

ஒன்றுக்கும் லாயக்கிலாதவனை பலவிதமாக தூண்டி, அவனை ஊக்குவித்து, பகவானின் கதைகளை சொல்லி, பகவானை அடைவது சுலபம் என்றெல்லாம் சொல்லி, அவனை பக்தி செய்யுமாறு தூண்டுவார். அப்படி செய்ய வைத்து விட்டு, அவர் பகவானிடம் உரிமையுடன் “இதோ பார்! உன் குழந்தையான இந்த ஜீவன், உன்னை அடைவதற்காக எப்படி கதறுகிறது. உனது கருணையை அதன் மீது நீ பொழிந்திட வேண்டாமா?” என்று எடுத்து சொல்வார். இதுதான் அவருடைய கலகம்.

– மஹாரண்யம் ஸ்ரீமுரளீதர ஸ்வாமிஜி

Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji

**Buddies Infotech**
THINKING WAY BEYOND LIMITS

OUR SOLUTIONS

- WEB DEVELOPMENT
- WEB MARKETING
- SOFTWARE DEVELOPMENT
- MOBILE SOLUTIONS

Buddies Infotech Pvt Ltd
KG Marina Bay,No.75 & 77, Ground Floor,
Santhome High Road Santhome.
Chennai 600 004
Phone: +91-44-43033313
E-mail: contact@buddiesinfotech.com

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்

- ஜனனி

## ஸ்ரீகிஷோரி சரண்பாபா- 5

தனது உடலைக்கூட தனதாக எண்ணாத ஸ்ரீகிஷோரி சரண்பாபா, தனது உடலை, மற்றவர்களின் துயரை துடைப்பதற்கான, ஒரு கருவியாகவே கண்டார். பலமுறை, அவர் தயையின் காரணமாக, மற்றவர்களின் நோய்களை தன்மேல் எடுத்துக்கொண்டு விடுவார். அப்படித்தான் பாபா தனது பக்தரான பார்கவ் மஹோதய என்பவரின் கண் நோயையும் தானே எடுத்து கொண்டார். மேலும் அவரிடம் "இதனால் எனக்கு ஒரு கஷ்டமும் இல்லை. நீயோ ஒரு நல்ல க்ரஹஸ்தன். உனது குடும்பத்தின் பொறுப்பு, உன் மீதே உள்ளது. நீ துன்பமடைந்தால் உன் குடும்பமே துயரமடையும். நீ போய் உனது வேலையை பார். எனக்கு இந்த கஷ்டம் நீடிக்காது. ஸ்ரீராதாவல்லபர் எனது கண்களை குணமாக்கி விடுவார்" என்று கூறினார். அவர் கூறியது போலவே மறுநாளே அவரது கண்கள் தெளிந்தன.

ஒரு முறை மீரட் நகரில், ஒரு வக்கீலின் மகன் ஒரு மாதத்திற்கும் மேலாக நோய்வாய்ப்பட்டு இருந்தான். அவன் பிழைப்பதற்கு எந்த அறிகுறியும் இல்லை என்ற நிலைமை ஏற்பட்டபொழுது, அந்த வக்கீல் ப்ருந்தாவனம் சென்று ஸ்ரீஹிதகிஷோரிசரண் பாபாஜியை சரணடைந்தார். தன்னுடன் மீரட் வந்து, தனது மகனை காப்பாற்றும்படி மன்றாடினார்.

பாபாவால் அவரது வேண்டுகோளை மறுக்க முடியவில்லை. அந்த வக்கீலுடன் மீரட்டிற்கு சென்று, அவரது க்ருஹத்தில் அவரது மகனை கண்டார். அவன் தனது கடைசி மூச்சை விட்டு கொண்டிருப்பதாகவே தோன்றியது. அவனை கண்ட மறுகணம், பாபா வெளியே வந்து படிகள் வழியாக கீழே இறங்கியபடியே நான் ப்ருந்தாவனம் திரும்புகிறேன் என்று வேகமாக சென்றார். இப்படி இறங்கும் பொழுதே அவர் ரத்த வாந்தி எடுத்தார். இதை கண்டதும்,

வக்கீல் மேலும் பயமுற்றார். அவர் பாபாவிடம் இரவு அங்கேயே தங்கும்படி மிகவும் ப்ரார்த்தித்தார். ஆனால் பாபா கேட்கவேயில்லை. அப்பொழுதே ப்ருந்தாவனம் சென்று விட வேண்டும் என்றே அவர் எண்ணினார். மறுநாள் வக்கீல் வீட்டை அடைந்தபொழுது, தனது மகன் படுக்கையிலிருந்து எழுந்து நடப்பதைக் கண்டு எல்லையில்லாத மகிழ்ச்சியும் ஆனந்தமும் அடைந்தார்.

பாபா அவனை பார்த்த மாத்திரத்தில் அவன் குணமடைந்தான். அந்த வ்யாதியை அவர் தானே ஏற்றார். அதனால் தான் அவருக்கு இரத்த வாந்தி ஏற்பட்டது. சில நாட்களுக்குப் பின் பாபாவின் உடல்நிலையும் தேறிவிட்டது.

பிறர் படும் வேதனையைக் கண்டு பாபாவின் மன வேதனையை வார்த்தைகளில் வர்ணிக்க முடியாது. மற்றவர்களின் துயரங்களை தாமே ஏற்று அவர் இறுதியில் ப்ராணனையே த்யாகம் செய்யும்படி நேரிட்டது.

ஆனால் நாம் முன்பு கூறியது போல் இது பாபாவின் வெளி தோற்றமேயாகும். அந்தரங்கத்தில் அவர் எப்பொழுதும் நாம ஜபம் செய்துகொண்டே இருப்பார்.

இது போன்ற லோகோபகாரமான செயல்களையும் அவர் செய்து வந்த நோக்கம் மற்றவர்களுக்கு நாமம் மற்றும் நாமியான பகவானிடம் நம்பிக்கையின் விதைகளை விதைப்பதே ஆகும். இது போன்ற அனுக்ரஹங்களை செய்து, அவர் மற்றவர்களிடம் நாமத்தை பிக்ஷையாக கேட்பார். நாமத்தின் மேன்மையை எடுத்துரைத்து, நாமமே ஒருவனுக்கு நன்மை கருதும் நண்பனாகவும், ரக்ஷகனாகவும், போஷிப்பவனாகவும், உத்தாரகனாகவும் இருக்கின்றது என்று நம்பிக்கை அளிப்பார்.

ஒருமுறை நாம மஹிமையை எடுத்துரைக்கும்பொழுது அவர் தன்னுடைய ஒரு ஆச்சரியமான அனுபவத்தை பகிர்ந்து கொண்டார். அதை அடுத்த இதழில் பார்ப்போம்.

(தொடரும்)

## மாலே மணிவண்ணா –105

–மகாவித்துவான் மயிலம். வே. சிவசுப்பிரமணியன்

*கார், மலர்ப்பூவை, கடலை, இருள், மணி*
*அவை ஐந்தும்உறழும் அணி கிளர் மேனியை* (40)

எம்பெருமானது திருமேனியின் சோபையை ஐந்து பொருள்களோடு ஒப்பிட்டு பார்த்து ஆனந்தப்படுகிறார். இவை ஐந்து பொருள்களுமே நீல நிறம் என்பதனால், ஒன்றாகவே இருக்கிறபோது ஐந்தாக சொல்வானேன் என்று ஐயம் தோன்றும். நிறத்தால் ஐந்தும் ஒன்றானாலும், தன்மையால் ஐந்தும் வேறுபடுகின்றன. அந்த ஐந்து தன்மைகளும், எம்பெருமானுக்கு பொருந்துகின்றன.

கார் என்பது மேகம். கருநிறமான திருமேனிக்கு ஒப்பாக மழை பொழிய நிற்கும் மேகம் கருமை பரவியுள்ளது. குளிர்ச்சி தன்மையும், மேலிருந்து கீழிறங்கும் தன்மையுடையதாய் உணவையும் உண்டாக்கித் தானும் உணவாகி நிற்கின்ற தன்மை உடைய நீரைத் தரும் மேகமே எம்பெருமான் திருமேனிக்கு உவமை ஆகிறது.

குளிர்ந்த கருணை உடையவன் எம்பெருமான். தன்னை அடைந்தார்க்குத் தாபத்ரயங்களைத் தவிர்த்து அவர்களுக்கு தன்னொளி செய்பவர். தன்னுடைய உயர் நிலையில் இருந்து கீழ் இறங்கி வந்து அருள் செய்பவன்.

பாற்கடல் நடுவே அறிதுயில் அமரும் பரந்தாமன் பலராமனாகிப் பகைவரை நடுங்கச் செய்ய அவதாரம் எடுக்கிறான். ஆருயிர்களைக் காக்க, மேலும் இறங்கி கடலுள் மூழ்கி எடுத்து ஆதிவராகம் ஆகித்தோன்றி உலகை நிலை நிறுத்துகிறான். உலகிடை வாழும் உயிர்களுக்குப் போக நிகழ்ச்சியைத் தந்து காத்தருளும் பெருமான் நித்ய சூரிகளாகிய முமுக்ஷுக்களுக்குத் தானே அநுபவப் பொருளாகவும் ஆகிறான்.

*“தானும் யானும் எல்லாம் தன்னுள்ளே கலந்தொழிந்தோம்*
*தேனும் பாலும் நெய்யும் கன்னலும் அமுதும் ஒத்தே”*

என்ற நம்மாழ்வார் பாடல் அவனே அனுபவிக்கப்படும் பொருளாக ஆவதைக் காட்டும். இத்தனைச் சிறப்பையும் மனத்திலே எண்ணிக் “கார்” என்ற மேகத்தை முதலில் வைத்தார் எனலாம்.

“பூவை மலர்” நிறத்தால் உவமையாகிறது. நீல நிறமும் மென்மையும் மலர்ச்சியும் உடையது. பெருமான் மென்மையும் மலர்ச்சியும் உடையவன். கடல் என்பது செய்யுள் விகாரமாய் ‘ஐ’ பெற்று கடலை என நின்றது. நீல நிறம் உடையதாயினும் கடல் அளப்பரியது. பகவானும் அளப்பரியவன். உயிர்களுக்கு உணவைத் தரும் நீரைப் பொழியும் மேகத்துக்கும் மூலகாரணமாய் இருக்கிறது. நில்லாமல் எப்போதும் இயங்கிக் கொண்டே இருக்கின்றது கடல். இத்தனையும் பகவானுக்கும் பொருந்துவதனால் கடல் உவமையாகிறது.

இருள் கருமை நிறத்துக்கு எடுத்துக்காட்டாகும். இருளுக்கு எம்பெருமான் நீல நிறத்தை உவமையாகச் சொல்வது கூட கவிஞர் வாக்கில் வருவதுண்டு.

ஆலம் உலகில் பரந்ததுவோ! ஆழி கிளர்ந்ததோ? அவர்தம்
நீல நிறத்தை எல்லோரும் நினைக்க, அதுவாய் நிரம்பியதோ?
.... விளைக்கும் இருளாய் விளைந்ததுவே (கம்ப. 546.)

மிதிலா நகரத்தில் விசுவாமித்திர முனிவரோடும், தம்பியோடும் வீதியிலே இராமன் நடந்து சென்ற போது கன்னிமாடத்திருந்து கண்ட பிராட்டியார் காதல் அவசரத்தால், உருகுகின்ற போது எம்பெருமான் நீல நிறத்தை எல்லோரும் நினைக்க நினைக்க, அதுவே இருளாய் விளைந்தது என்று கூறிப் புலம்புவதாகக் கம்பன் சொல்கிற கற்பனை நினைக்க இன்பம் தரும். கொடிய இருளைப் பார்த்தாலும் எம்பெருமானாக நினைக்கப் பழகுவதற்கு உணர்வு ஏற்பட்டால் வேறு என்ன வேண்டும்? (தொடரும்)

## அப்பாலுக்கு அப்பால்

### பசவேஸ்வரர் -1

பீஜப்பூரிலிருந்து ஒரு 35மைல்கல்லில் பகேவாடி என்று ஒரு ஊரில் பல நல்ல வைதீக அந்தண குடும்பங்கள் வாழ்ந்து வந்தன. அதில் லிங்கபட்டர் என்ற பண்டிதரின் மகன் மதிராஜா. லிங்கபட்டர் சிறிய வயதிலேயே இறந்து விட்டதால் தாய் சந்திராதான் மதிராஜாவை வளர்த்தாள். மதிராஜா அந்த ஊர் அக்ரஹார தலைவர். மதிராஜா சத்ய சந்தர். சிக்கலான விஷயத்தையும் சாமர்த்தியமாக கையாள கூடியவர். மறைத்து பேசாமல், எதையும் நேராகவே பேசும் இயல்பு கொண்டவர். இதையும் தாண்டி, கல்விமானாகவும் கர்வமில்லாதவராகவும் இருந்தார் இவர்.

சிவதேவய்யா என்பவர் இங்கலேஸ்வர் என்ற பக்கத்து ஊரிலிருந்தார். இங்கலேஸ்வரிலும் பிற இடங்களிலும் பெருமதிப்பு வகித்து வந்தவர் இவர். சிவதேவய்யாவின் பத்னி சுவர்ணாம்பிகை. அவரது ஒரே மகனான பலதேவராஜன் அரசாங்க கருவூலத்தில் முக்கிய பொறுப்பு வகித்து வந்தார். அவர்களது ஒரே மகள் மதலாம்பிகை திருமண வயதை எட்டி இருந்தாள்.

சிவதேவய்யாவிற்கு பகேவாடியை சேர்ந்த மதிராஜரை கேள்விப்பட்டு மிகவும் பிடித்து போயிற்று. குலம் ஒன்றுதான். இரு பரம்பரைகளும் சிலாக்கியமானதுதான். சொத்து, அந்தஸ்து என்பது சிவதேவய்யாவின் அளவிற்கு மதிராஜரிடம் இல்லை. ஆனாலும் அவருக்கு மதிராஜரை தனது மருமகனாக்கி கொள்ள ஆசை. அந்தஸ்து சமமில்லை என்று அவரது மனைவி சுவர்ணாம்பிகைக்கு அதில் இஷ்டம் இல்லை. மேலும் அப்பா இல்லாத பிள்ளையே என்ற கவலை அவளுக்கு. சிவதேவய்யா ஆனால் தெளிவாக இருந்தார். “சுவர்ணா, சொத்து, பந்தங்களை மட்டுமே பார்க்காதே. அந்த மதிராஜனிடம் குணம் என்ற செல்வம் இருக்கிறதே. மேலும் பகேவாடி அருகிலேயே இருக்கிறது. மதலாம்பிகையும் நம் அருகிலேயே இருப்பாள்” என்றார். சுவர்ணா சிவதேவரின் கடைசி வரிகளுக்கு கட்டுப்பட்டு சம்மதித்தாள்.

மதிராஜருக்கும் மதலாம்பிகைக்கும் திருமணம் நடந்த

பிறகுதான் மதிராஜரின் அந்தஸ்து கிடுகிடுவென வளர்ந்தது. சிவதேவய்யரின் உறவால் இவரை முக்கியமானவர் என அனைவரும் கருதலாயினர். அதனால் வழக்கமாக வைதீக நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டோ அல்லது கல்வி கற்பித்தோ ஜீவனம் நடத்தி வந்த மதிராஜர் அக்ரஹார தலைவர் ஆனார். இவர்களது முதற்குழந்தை தேவராஜன். மிக அருமையாக வேதம் பயின்றான் அவன். அவனுக்கு ஒரு தமக்கை. பெயர் நாகம்மாள். பின்னால் வரப்போகும் பசவரின் வாழ்க்கையில் இவள் ஒரு முக்கிய தூண். நாகம்மாளுக்கு பின் எட்டு வருடங்களுக்கு பின் மதலாம்பிகை மறுபடி கருவுற்றாள். இந்த கரு அமைந்த சமயத்திலிருந்தே மதலாம்பிகையின் மனதில் வியத்தகு மாற்றங்கள் உண்டாயின.

அக்காலத்தில் கட்டுப்பாடுகள் மிக அதிகமாக இருந்தது. வைதீகர்கள் அக்ரஹாரத்தில் ஒரு பகுதியாகவும், வணிகர் போன்றோர் மற்ற இடங்களிலும் வசித்து வந்தனர். சேரி என்ற பகுதியும் இருக்கும். இதில் வாழ்வோரின் தரம் மிக குறைவாக இருந்தது. அவர்களுக்கான வசதிகளும் குறைவு. சரியான கல்வியும் கிடையாது. பிறரின் கட்டுப்பாட்டிலும், அவர்களது தயவிலும், இந்த சேரியில் வாழ்ந்தோர் மிக கடினமான பரிதாபத்திற்குரிய வாழ்வை மேற்கொண்டிருந்தனர்.

மதிராஜர் முற்போக்கு சிந்தனை கொண்டவர்தான். இந்த கட்டுப்பாடுகளை அவர் பெரிதும் கண்டு கொண்டதில்லை. ஆனால் தனக்கென ஒரு சட்டம் என அவர் இருந்ததும் இல்லை. இந்த காரணம் கொண்டுதான், அவர் அக்ரஹாரத்து தலைவராக இருக்கையில், அவரது வாக்கையே பஞ்சாயத்து வழக்குகளில் முடிவாக கொள்வர். அவர் முன் ஒரு சிக்கலான வழக்கு வந்தது.

இதே சமயத்தில்தான் மதலாம்பிகையும் பிரசவிக்க இருந்தாள். பகவாடியில் உள்ள பசவேஸ்வர சிவன் கோவிலுக்கு செல்கையில் எல்லாம், அவளுக்கு ஒரு வினோத அனுபவம் ஏற்பட்டு வந்தது. இதற்கும் மதிராஜர் முன்னால் வந்த வழக்கிற்கும் சம்பந்தம் இருந்ததை பிற்கால சம்பவங்கள் நிரூபித்தன.

(தொடரும்)

"மதுரமுரளி" மாத இதழுக்கு சந்தாதாரர் ஆக விரும்புகிறவர்கள் Guruji Sri Muralidhara Swamigal Mission என்ற பெயருக்கு 51, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83 என்ற முகவரிக்கு ரூ120/-ஐ (ஒரு வருட சந்தா) உள்ளூர் காசோலை / டி.டி. / மணியார்டர் அனுப்பவும். நேரில் ரொக்கம் கொடுத்தும் சந்தாதாரர் ஆகலாம். தங்களது முகவரியை மிகவும் தெளிவாக குறிப்பிடுமாறு கேட்டு கொள்கிறோம். ஏற்கனவே சந்தாதாரராக இருப்பவர்கள் தங்களது சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். மேலும் விவரங்களுக்கு : +91-44-24895875


- Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, Chennai - 83


- Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
- Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
- Advertisements in Madhuramurali are invited.


## ஸ்ரீஸ்வாமிஜியின் நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| ஏகாதசி | மார்ச் 4, 18 ஏப்ரல் 3, 17 |
| மார்ச் 2 | நாரத கானசபா - விஜய் டி.வி. பக்தி திருவிழா துவக்கம் |
| மார்ச் 4 -12 | பெங்களூர் சுந்தர ஹனுமான் கோவில் - ராமாயண நவாஹம் |
| மார்ச் 25 | வான்மருத்தீ - கடலூர் அருகே கோவில் கும்பாபிஷேகம் |
| மார்ச் 25 - 31 | சென்னை புவனேஸ்வரி அம்மன் கோவிலில் பக்த விஜயம் - உபன்யாசம் |
| ஏப்ரல் 6 | தஞ்சாவூர் மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை |
| ஏப்ரல் 10 | பெங்களூர் சுந்தர ஆஞ்சநேயர் பிரதிஷ்டா தினம் |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை


Dr.A.BHAGYANATHAN, Personal Secretary
to **HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org

என்னும் முகவரிக்கு அனுப்பவும்.